
# தேவன் எப்போதும் தமது வாக்குத்தத்தங்களில் உண்மை உள்ளவராகவே இருந்தார்

பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகங்கள் சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் H3b பாடத்தை வாசிக்கவும்.


## 1. வரலாற்றுப் புத்தகங்களைப் போதிக்க ஜெபத்தோடும் வார்த்தையோடும் ஆயத்தப்படுக.

**ஜெபம் :** "தேவனாகிய கர்த்தாவே! பழைய காலங்கள் முழுவதும் நீர் உமது மக்களுக்கு உண்மை உள்ளவராகவே இருந்தீர். இன்று நானும் எனது மந்தையும் உம்மை நம்ப கற்றுக் கொள்வோமாக! எங்களுக்குப் பின் எங்கள் குழந்தைகள் உம்மை நம்புவார்களாக."

மேசியாவாகிய இயேசு பிறப்பதற்கு முன், ஒவ்வொரு புத்தகங்களிலும் உள்ள நிகழ்ச்சிகள் எவ்வளவு ஆண்டுகள் நிகழ்ந்தன என்பதை **கீழ்வரும்** பட்டியலில் உள்ள எண்கள் தருகின்றன. புதிய ஏற்பாடு இந்த வரலாற்று புத்தகங்களை எல்லாம் எவ்வாறு குறிக்கிறது என்பதை ஒவ்வொரு புத்தகத்திலும் உள்ள நன்கு அறிந்த வசனம் ஒன்று குறிப்பிடுவதைக் காண்க :




**1406-1383. யோசுவா** கானானை வென்று அதற்குள் இஸ்ரவேலரை அழைத்துச் சென்றான். யோசுவா 1:7 ஐப் பார்க்க. அவர்கள் கர்த்தருக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்தபோதே வெற்றி அவர்களுக்குக் கிடைத்தது. புதிய ஏற்பாடு எவ்வாறு யோசுவாவில் 6:22-25 இருந்து ராகேபின் கதையை மேற்கோள் காட்டுகிறது என்பதை **எபிரேயர் 11:31** ல் காண்க.



**எரிகோவின் சுவர் சரியத் தொடங்குகிறது.** யோசுவா 6:15-20 ஐப் பார்க்க.

**1386-1045. நியாயாதிபதிகள் :** இஸ்ரவேலர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருந்த 300 ஆண்டு காலத்தில் தோன்றிய பிரதேச தலைவர்களும், வீரர்களும், விடுவிப்பவர்-களுமே நியாயாதிபதிகள். **நியா.16:6** ஐக் காண்க. **எபி.11:33** நியா.14:5-6 லிருந்து சிம்சோனை சுட்டிக்காட்டுகிறது.

**1100. ரூத்,** அந்நிய தேசத்தாளாகிய ரூத் இஸ்ரவேலின் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தாள். போவாசைத் திருமணம் செய்து தாவீது இராஜாவுக்கும் மேசியாவாகிய இயேசுவுக்கும் மூதாதையாக விளங்கினாள். 1100-1010. 1 சாமுவேல், சாமுவேல் தீர்க்கதரிசியின் தலைமையையும், சவுலின் ஆட்சி, வீழ்ச்சியையும், தாவீதின் எழுச்சியையும் பற்றிய விவரங்களைத் தருகிறது.15:22 ஐ காண்க. 1 **சாமு.13:14** ல் கர்த்தர் தாவீதைப் பற்றி கூறிய வார்த்தைகளை **அப் 13:22** ல் காண்க.

1010-970. **2 சாமுவேல்** தாவீது இராஜாவின் பல வெற்றிகளையும், அவனது பாவங்களையும், தோல்விகளையும், அவனுடைய அரசியல் பிரச்சினைகளையும் கூறுகிறது. **2 சாமு 7:9** ஜப் பார்க்க: 2 சாமு.8,14 ல் தேவன் தாவீதின் சந்ததிக்குத் தந்த வாக்குத்தத்தத்தை **2 கொரி.6:18** நமக்கு எடுத்து பொருத்தித் தருவதைக் காண்க.

1011-970. 1 **நாளாகமம் :** தாவீது இராஜாவின் அரசாட்சியைப் பற்றி கூறுகிறது. 1 **நாளா.4:10** ஜப் பார்க்க. 1 **நாளா.17:11,13** ல் தாவீதுக்கு தரப்பட்ட வாக்குத்தத்தம் **எபி.1:5** ல் இயேசுவுக்கு எடுத்தாளப்படுவதைக் காண்க.

**970-538. 2 நாளாகமம்** இஸ்ரவேல் மற்றும் யூதா இராஜ்யங்களை ஆண்ட மன்னர்களின் ஆட்சி காலங்களை, சாலொமோனின் முடிசூட்டலில் இருந்து தொடங்கி, யூதா இராஜ்யத்தின் வீழ்ச்சி உட்பட, 538 ல் தேவாலயத்தை எருசலேமில் திரும்பக்கட்ட பெர்சிய இராஜா கோரேசு பிறப்பித்த உத்தரவு வரை உள்ள நிகழ்ச்சிகளைக் கூறுகிறது. **2 நாளா.13:10** ஜப் பார்க்கவும். **2 நாளா.24:20,21** ஐ இயேசு நினைவு கூருவதை **மத்தேயு 23:35** ல் காணலாம்.

**970-853. 1 இராஜாக்கள்.** சாலொமோனின் ஆட்சி பற்றியும், வட இஸ்ரவேல், தென் யூதா ஆக இரண்டு இராஜ்யங்களாக தேசம் உடைந்தது பற்றியும், எலியா தீர்க்கத்தரிசியின் ஊழியத்தைப் பற்றியும் கூறுகிறது. **1 இராஜா 3:9** ஜப் பார்க்கவும். **1 இராஜா.19:10,14,18** ஆகிய வசன மேற்கோள்களை **ரோமர் 11:3,4**ல் காணலாம்.

**853-561. 2 இராஜாக்கள்.** எலிசா தீர்க்கத்தரிசியின் செயல்பாடுகளையும், இஸ்ரவேல், யூதா இராஜ்யங்களின் நல்ல மற்றும் மோசமான இராஜாக்களைப் பற்றியும் கூறுகிறது. **2 இராஜா.19:15** ஜப் பார்க்க. இஸ்ரவேல் ஜனங்கள் 722 ல் அசீரியாவுக்கும், யூதா ஜனங்கள் 561 ல் பாபிலோனியாவுக்கும் கொண்டு போகப்பட்டனர். **2 இராஜா 5:1-27** ல் எலிசாவுக்கு கீழ்ப்படிந்து குணமடைந்த சிரியா தேசத்தானைப் பற்றி **லூக்கா 4:27** ல் காணலாம்.

**538-516. 458-457 எஸ்ரா.** தீர்க்கதரிசனத்தின்படி சிறையிலிருந்து யூதாவுக்கு செருபாபேல் தலைமையில் திரும்பி வந்த முதல் குழுவைப் பற்றியும், எஸ்ராவின் தலைமையில் வந்த இரண்டாவது குழுவைப் பற்றியும் எஸ்ராவில் காணலாம். **எஸ்ரா 3:11** ஜப் பார்க்கவும். அவிசுவாசத்தின் காரணமாக வரும் தண்டனையைப் பற்றி **எஸ்ரா 9:7** ஐ இயேசு உபயோகிப்பதை **லூக்கா 21:24** ல் காண்க.

**483-473. எஸ்தர்.** யூதப் பெண்ணாகிய பாபிலோன் அரசனின் இராணி, அரசனோடு பேசி யூதர் குலம் அழிந்து விடாதபடி அதன் எதிரிகளிடம் இருந்து மீட்ட வரலாற்றைக் கூறுகிறது. **எஸ்தர் 4:14** ஐ பார்க்க. மூட மன்னனான எரோது **எஸ்தர் 5:3,6** லிருந்து வார்த்தைகளை உபயோகிப்பதை **மத்.6:23** ல் காணலாம்.

**444-425, நெகேமியா:** பாபிலோனிய அரசனான அர்தசஷ்டா I இடம் இருந்து எருசலேம் மதில்களைத் திரும்பக் கட்டும் ஆணையோடு நெகேமியா தலைமையில் இன்னொரு கூட்டமான சிறைப்பட்ட மக்கள் எருசலேமுக்கு வந்த வரலாற்றைக் கூறுகிறது. **நெகேமியா 8:10** ஜப் பார்க்கவும். **நெகேமியா 9:15** ஐ இயேசு எடுத்தாளுவதை **யோவான் 6:31** ல் காணலாம்.

2. வரும் வார செயல்பாடுகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுதல்.

வேதாகமத்தில் உள்ள வரலாற்று புத்தகங்களின் பெயர்களையும் அவை கூறும் முக்கிய விஷயங்களையும் **கண்டு படிக்குமாறு** உங்களிடம் பயிற்சி பெறுபவர்களுக்கு உதவவும்.

யோசுவா, ரூத், கிதியோன், சிம்சோன், தாவீது, சாமுவேல், எலியா, எலிசா, நெகேமியா போன்ற **வேதாகமத்தில் வரும் வீரர்களை** பற்றி வரலாற்று புத்தகங்களில் கண்டுணர்க. உங்கள் மந்தையை சந்திக்கும் போது இவற்றில் சில கதைகளைக் கூறவும்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்**

பகுதி 2ல் நீங்கள் ஆயத்தம் செய்த ஒரு கதையைக் கூறவும் அல்லது நடிக்கவும்.

**சிறுவர்கள்** தாங்கள் தயாரித்த விஷயங்களை வழங்கலாம்.

கர்த்தரின் பந்தியை ஆசரிக்கும் முன் 1 சாமு 15.22 ஐ வாசிக்கலாம். பழைய ஏற்பாட்டு மிருகபலி கிறிஸ்துவின் மரணத்தை முன்னறிவித்ததை விளக்கவும். மனம் திரும்புதலும், விசுவாசமும் இல்லாத வகையில் கர்த்தரின் பந்தியை ஆசரிப்பதால் ஒரு பயனும் இல்லை.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைத்து நோயாளிகளுக்காக, கிறிஸ்து தேவைப்படும் அருகில் உள்ள மக்கள் சமுதாயம், சபை தலைவர்கள் ஆகிய குறிப்புகளுக்காக ஜெபிக்கவும்.

இணைந்து யோசுவா 1:7 ஐ **மனனம் செய்க.**

| **நியாயதிபதிகளின் புத்தகத்தில் இருந்து : நிகழ்ச்சிகளும் நியாயாதிபதிகளும்** | **ஆண்டுகள்** |
|---|---|
| இஸ்ரவேலர் கூசாண்ரிஷதாயீமை சேவித்தல், 3:7-8 | 8 |
| ஒத்னியேல் இஸ்ரவேலை விடுவித்தபின் அமைதி, 3:7-11 | 40 |
| இஸ்ரவேலர் மோவாபியரை சேவித்தல். 3:12 | 18 |
| ஏகூத் இஸ்ரவேலை விடுவித்தபின் அமைதி, 3:12-30 | 80 |
| பெலிஸ்தியரிடம் இருந்து சம்கார் இஸ்ரவேலை விடுவித்தல் 3:31 | 1 |
| இஸ்ரவேலர் கானானியரை சேவித்தல், 4:1-3 | 20 |
| தெபொராளும் பாராக்கும் விடுவித்தபின் அமைதி 4:1-5:3 | 40 |
| அபிமெலேக்கு, இஸ்ரவேலின் இராஜா, 9:1-57 | 3 |
| தோலாவின் காலம், 10:(1-5) | 23 |
| யாவீரின் காலம் 10:3-5 | 22 |
| இஸ்ரவேலர் அம்மோனியரையும் பெலிஸ்தரையும் சேவித்தல் 10:8-10 | 18 |
| யெப்தாவின் காலம், 10:8-12:7 | 6 |
| இப்சானின் காலம், 12:8-10 | 7 |
| ஏலோனின் காலம், 12:11-12 | 10 |
| அப்தோனின் காலம். 12:13-15 | 8 |
| இஸ்ரவேலர் பெலிஸ்தரை சேவித்தல் 13:1 | 40 |
| சிம்சோனின் காலம், 13:1-16:31 | 20 |
| From Nelson's Complete Book of Bible Maps and Charts © 1993 Thomas Nelson | |

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net